www.padippakam.com

ஜனவரி 2001

மாண்பைக் காக்கும்மாத இதழ்

# மக்கள் களம்

## MGM சுற்றுலா மையத்தில்




# ஜோதிபா தொழிலாளர் சங்கம்

# ஆரம்பம்....

ரூ. 3.00

படிப்பகம்

www.padippakam.com

# சேட்டுகளின் கூட்டாளி ராமதாஸ்

வன்னியர்சங்க
வளச்சிப்போட
சாதிவெறியில்
சந்திசிரிச்சு

வன்னியர்தலித்
வாக்குப்பொறுக்கும்
தலித்முதல்வர்
தேர்தல்கால

கட்சிகொடியில்
காரல்மார்க்சை
பெரியாரின்
பிரபுத்துவக்

செயலலிதா
சீட்டுவாங்க
அம்பானியின்
சந்தையிலே

கோவணத்தை
கோபத்தோடு
எம்.பி. சீட்டு
வெட்கங்கெட்டு

பெரியார்கொள்கை
பி.ஜே.பிக்கு
ஓட்டுசீட்டு
வேட்டையாட

தொடைத்தட்டி
தூங்கும்போது
நேருக்குநேர்
சேரிகளைச்

முகமூடிதான்
செய்த சூழ்ச்சி
சமர்புரிது
பாண்டிச்சேரியில்

ஒற்றுமையென்பது
சூழ்ச்சியென்பது
முழக்கமெல்லாம்
பொய்புரட்டு

அம்பேத்காரு
சேர்த்துநம்மை
படத்தைப்போட்டு
குணங்களோடு

மலத்தில்நெளியும்
அதேபுழுவை
அரண்மனையோட
சேட்டுகளின்

உறுவும்ஆளு
அறிக்கைவிட்டார்
ஏழுக்காக
கூட்டுச்சேர்ந்த

பேசிவந்தார்
வால்பிடிப்பது
பந்தயத்திலே
வீதியிலே

வீரம்பேசும்
கழுத்தறுக்கும்
மோதமுடியாத
சாம்பலாக்கும்

பா.ம.க - சேரியே
பப்பரப்பா
பா.ம.க - இன்று
நாறுதப்பா.

பொய்யாச்சு சேரி-
மெய்யாச்சு
என்னாச்சு - அது
என்றாச்சு.

படத்தைப்பார்- கூட
ஏய்க்கிறார்
பீத்துறார்- ராமதாஸ்
அலைகிறார்.

புழுஎன்றார்- அஞ்சு
கிளிஎன்றார் -
விருந்தாளி-தேர்தல்
கூட்டாளி.

கலைஞரு-என்று
டாக்டரு
ராமதாஸ் - அன்று
அவலம்பார்.

டாக்டரு- இப்ப
டக்கரு
ராமதாஸ்-பதவி
அலையுரார்.

சூரர்கள்- இரவில்
பேடிகள்
கோழைகள்-நித்தம்
பாவிகள்.

**சேரி மைந்தன்**
**மதுரை.**


படிப்பகம்

www.padippakam.com

# இனியொரு யுகம் செய்வோம்!

திட்டம் : 102
செயல் : 1

நிறுவன - ஆசிரியர்
**எல். யேசுமரியான்**

ஆசிரியர் குழு
**சிந்தை ராஜன்**
**பட்டி தமிழ் விரும்பி**
**களப்பிரியா**

உரிமை மற்றும்
வெளியிடுபவர்
**ஜி. கோபிநாதன்**
67, கெனால் தெரு,
சி.பி. ரோடு,
சென்னை-600 021.

அச்சிட்டோர்
**நவஜோதி அச்சகம்**
சென்னை-600 002

படைப்புகள், சந்தா
மற்றும் தொடர்புகளுக்கு
**எம்.ஜெ.நாயகம்**
நிர்வாகி
57/1, திருக்கழுகுன்றம் ரோடு,
வல்லம் அஞ்சல்,
செங்கல்பட்டு-603 002.

# களம் காணும் நெஞ்சங்களே!

டிசம்பர் 30, 1999 ஆம் ஆண்டு வேலூர் மாநாட்டில் "இந்த யுகம் தலித் யுகம்", "21 ஆம் நூற்றாண்டு அம்பேத்கர் நூற்றாண்டு" என்று அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் அறிவித்தது.

"21 ஆம் நூற்றாண்டு, புத்தாயிரம்" 2000 ஆண்டில் தொடங்குகிறதா, அல்லது 2001-ல் தொடங்குகிறதா என்று விவாதம் நடைபெற்றது. விடை எப்படி இருப்பினும் தலித் யுகத்தையும், அம்பேத்கர் நூற்றாண்டையும் படைப்பது நம்முன் நிற்கும் கடமையும் , சவாலும் ஆகும்.

அதே டிசம்பர் 30, 2000 அன்று நடந்த வேறொரு நிகழ்ச்சி தலித் யுகத்தை நினைவுப்படுத்தியுள்ளது. சென்னைக்கு அருகில் உள்ள MGM சுற்றுலா மையத்தில் ஜோதிபா தொழிலாளர் சங்கம் தொடங்கிய ஒரே காரணத்திற்காக அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க நிறுவனர், தலைவர் மற்ற இயக்க தோழர்கள் மீது பொய் வழக்குப் போடப்பட்டு காவலர்களின் தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். இயக்க தலைவர் ப. அசோகன் சிறையில் அடைக்கப்பட்டார்.

இயக்க தலைமைக்கு "போலீஸ் தொல்லை, சிறை" என்றால் நமக்கெல்லாம் என்ன நடக்குமோ என்ற அச்சம் சிலருக்கு உருவாகி இருக்கலாம். நமது உரிமைகளை வென்றெடுக்க முயலும்போது காவலர்களும், அரசியல்வாதிகளும், அரசு இயந்திரங்களும் நமக்கு எதிராகவே உள்ளன என்பது எதார்த்தமான உண்மை. இந்நிலையில் காவலர்களின் தொல்லையும், சிறையும் தவிர்க்க முடியாதவை. சேதாரமில்லாமல் நகை செய்திட முடியாது. தியாகமும், இழப்பும் இன்றி தலித் விடுதலை பெற்றிட முடியாது. இதை ஏற்றுக்கொள்பவரே உண்மையான இயக்கவாதியாக இருக்கமுடியும்.

சிறைகளின் கதவுகளை விடுதலையின் கதவுகளாகவும் போராட்டங்களில் சிந்தப்படும் இரத்தத்தை விடுதலையின் வித்துக்களாகவும் சந்திக்கும் இழப்புகளை சமுதாயத்தின் சொத்துக்களாகவும் எண்ணுதல் மட்டுமே தலித் உணர்வாகும். "யாசித்தோ மனு செய்தோ இழந்த நம் உரிமைகளை பெற முடியாது. போராடி மட்டுமே பெற முடியம்" என்றார் அறிவர் அம்பேத்கர். இந்தப் புதிய ஆண்டை அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் போராட்டங்களோடு தொடங்கியது நம் இயக்கத்தின் தனித்தன்மை என்று பெறுமை கொள்!.


எனவே களத்தில் உள்ளவர்கள் சிறை செல்லவும், இழக்கவும் தியாகம் செய்யவும் காத்திருத்தல் வேண்டும். கோஷங்களால் அல்ல கொள்கைகளுக்காக வாழும்போது மட்டுமே அம்பேத்கர் நூற்றாண்டை உருவாக்க முடியும். சமரசம் செய்துகொள்ளும்போது அல்ல தியாகம் செய்யும்போது மட்டுமே தலித் யுகம் படைக்க முடியும்.

என்றும் களம் நிற்கும்

எல். யேசுமரியான்


படிப்பகம்

www.padippakam.com



தலித் மக்களை சுமக்க மறுக்கும் அரசுப் பேருந்துகள்

# அரசு பேருந்தில்

கடலூர் தீண்டாமை கொடுமைகளுக்கு தலித்மக்கள் ஆளாவதும், தாழ்த்தப்பட்ட கிராமங்கள் மீது சாதி இந்துக்களாகிய படையாச்சிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதும் அவர்களின் உடமைகளை தீக்கிரையாக்குவதும் வாடிக்கையான நிகழ்வாகும்.

தலித் மக்களை கொடுமையாகத் தாக்குவதே தொழிலாகக்கொண்ட காடுவெட்டியின் அடியாட்கள் நிறைந்த சேத்தியாதோப்புக்கு அருகேயுள்ள அம்பாள்புரத்து தலித்மக்களின் சாதி கொடுமையை சொல்லவா வேண்டும்!

அரசு பேருந்துகளில் தலித் மக்கள் ஏறக்கூடாது என உத்தரவு போடும் அளவுக்கு படை யாச்சிகளின் சாதி வெறியும், அராஜகமும் உச்ச கட்டத்தை அடைந்து வருகிறது.

அம்பாள்புரம் தலித் மக்கள் குடியிருப்பு பகுதியை தவிர மற்ற எல்லா பகுதிகளிலும் படையாச்சிகளின் ராஜ்ஜியம் கொடிக்கட்டி பறப்பதால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏது நிம்மதி?

பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த ராமச்சந்திரன் படையாச்சிதான் ஊராட்சி மன்ற தலைவர், துணை தலைவர், வார்டு உறுப்பினர்கள் உள்பட அனைவரும் அவர்களே. மக்கள் தொகை யிலும் நிலங்களிலும் பெரும்பகுதி படையாச்சிகள் கைவசம் என்பதால் அவர்கள் நடத்தும் காட்டு தர்பாருக்கு அளவே இல்லை

படையாச்சி ஊராட்சி மன்ற தலைவராக இருப்பதால் தாழ்த்தப்பட்ட பகுதியை தவிர மற்ற எல்லா பகுதிக்கும் எல்லாவசதிகளும் செய்யப் பட்டுவிட்டது. இதுவரை தாழ்த்தப் பட்டவர்கள் வாழும் பகுதிக்கு மட்டும் எந்தவித அடிப்படை வசதியும் செய்யாமல் தட்டி கழிக்கப்பட்டு வருவது உலகமறிந்த செய்தி.

இது பற்றி தலித் மக்கள், தலைவர் ராமச்சந்திரனிடம் கேட்டால் "பறபசங்களுக்கு நாங்க ரோடு போடனுமா? அதுலாம் போட முடியாது போங்கடா, இனிமேல் இது வேணும் ,அதுவேணும்னு வந்தா உங்க காலனியே இருக்காது. வசதி கேக்கிற அளவுக்கு வந்துட்டீங்கலா" என மிரட்டினர்.

சுதந்திர இந்தியாவில் சாதி கொடுமையில் சிக்கி தவிக்கும் அப்பாவி மக்களை சந்திக்க களம் இறங்கினோம்.

"சார் எங்க பகுதியில் நூறு குடும்பங்கள்தான் தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கிறோம். அம்பாள்புரத்து அருகில் உள்ள எல்லா கிராமங்களிலும் படையாச்சிகள்தான் அதிகம். நாங்க குறைவா இருக்கின்றதனால அவங்க வச்சதுதான் சட்டம், பணபலம் ,படைபலம் அதிகமாக உள்ளதால் அவங்க அராஜகத்துக்கு அளவே இல்லைங்க நியாயமுனு ஏதாவது கேட்டுட்டா வீடு புகுந்து தாக்கிட்டு போயிடுவாங்க. இதனால் எங்களுக்கு எந்த நேரத்திலேயும் ஆபத்துதான்.

ராமசந்திரன் படையாச்சி தலைவரான பிறகுதான், படையாச்சிகள் எங்கள அதிகமாக கொடுமைபடுத்திவராங்க. சமீபத்தில் எம்.பி தேர்தலில் எங்களை ஓட்டு போட விடாம இவங்களே குத்தி போட்டுட்டாங்க. இதை எதிர்த்துகேட்ட எங்கள புவனகிரி பாட்டாளி மக்கள் கட்சி ஒன்றிய செயலாளர் ஏ.ஆர். ரவி, வேல்முருகன், தலைவர் ராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில் பலர் எங்களை அடித்து துரத்தியது மட்டும் இல்லாமல் "பறபசங்க எவ்வளவு திமிரு இருந்தா இங்க வந்து ஓட்டு பத்தி பேசுவானுங்க. இதை இப்படியே விட்டுவிட கூடாதுனு" எங்க மேல பொய் வழக்கும் கொடுத்தாங்க. சிதம்பரத்தில் இருந்து தலைகுளம் போகும் 26 என்ற தட பஸ்சும், காட்டுமன்னார்குடியில் ருந்து மருதூர் செல்லும் 347 என்ற தட பஸ்சும் எங்க பகுதியை தாண்டிதான் அவங்க பகுதிக்கு போகும் திரும்பி வரும்போது அவங்க பகுதியில இருந்து எங்க பகுதியை தாண்டி பின்னலூர் செல்லும். எங்க ஊரில் இருந்துசி.முட்டலூர் கல்லூ ரிக்கும், வடலூர் பள்ளிக்கும், சேத்தியாதோப்பு பள்ளிக்கும் போறவங்களும், வேலைக்கு போறவங்களும் இந்த பஸ்சுலதான் போவோம் ஆனா, எம்.பி தேர்தலுக்கு பின்னர் எங்க பகுதியில நிற்பது பஸ் கிடையாது.



அருள்



படிப்பகம்

www.padippakam.com

பா.ம.க. ஒன்றிய செயலாளர் ஏ.ஆர். ரவி மற்றும் படையாச்சிங்க எல்லாம் பஸ் டிரைவரையும் அதிகாரிகளையும் மிரட்டி நாங்க வர பஸ்சில பற பசங்கல ஏத்தக் கூடாது என ஆணைப்போட்டுள்ளனர்.

இது பற்றி சிதம்பரம் பணி மனையில் புகார் கொடுத்தும் பலன் இல்லை. தப்பித் தவறி என்னைக்காவது எங்க புள்ளைங்க பஸ்சில் ஏறிவிட்டால் பஸ்சில் வரும் படையாச்சிகள் "நாங்க போற பஸ்சில் எவ்வளவு தைரியம் இருந்தா வருவடா பற நாயே. நீ படித்தா என்ன படிக்காட்டா என்னடா?" எனக் கூறி அடித்து இறக்கி தள்ளி விட்டுவாங்க.

இதனால எங்க பகுதியில் இருந்து பள்ளி, கல்லூரிக்கும், வேலைக்கும் போறவங்க இந்த பஸ்சில் போவதே கிடையாது. நடந்தே பின்னலூர் சென்று சேத்தியதோப்பில் இருந்து வடலூர் செல்லும் 102 தட பஸ்சுல ஏறுவோம். அதுவும் சேத்தியா தோப்பிலிருந்து வருவதால் படையாச்சிகள் அதிகமாக வருவாங்க. அவங்கள தொடாம நிக்கனும். எங்க பள்ளி மாணவர்கள் புத்தக பைகூட அவுங்க பசங்க மேலபட கூடாது. எங்க மூச்சு கூட அவங்க மேல பட கூடாது. அப்படியும்

# லித்துகளுக்கு தடா!

கேவலமான நிலையில் பஸ்சில் ஏறி வந்தாலும் கரைமேடு என்ற சாதி வெறி பிடிச்ச படையாச்சி கிராமத்தில் பா.ம.க. வைச் சேர்ந்த தலைவர் கிருஷ்ணமூர்த்தி அவரது அண்ணன்மகன் ஜோதிமுருகன் தலைமையில் ஒரு கும்பல் பஸ்சை மடக்கி சாதியைக் கேட்டு பஸ்சில் இருந்து தாழ்த்தப்பட்டவர்களை இழுத்து அடித்து "பற தேவடியாப்பசங்களே எங்க பிள்ளைகள் ஏர்ற பஸ்சுல ஏறாதீங்கடானு சொல்லுறோம் இல்ல, ஏண்டா ஏறிக்கிறிங்க" என்று சொல்லி பள்ளி மாணவர்களையும், வேலைக்கு போறவங்களையும் அடித்து உதைப்பது தினமும் நடைபெறுகிறது.

கடந்த 19.10.2000 அன்று அந்த பஸ்சில் வடலூருக்கு வேலைக்கு போகும் கார்த்திக் என்ற தாழ்த்தப்பட்டவரை "ஏன்டா எங்க புள்ளைங்க கூட பஸ்சில வர" என கேட்டு பயங்கரமாக தாக்கப்பட்டார் அதற்கு இரண்டு நாள் கழித்து 21.10.2000 அன்று அந்த பஸ்சில பயணம் செய்த என்னை வடலூர் பஸ் நிறுத்தத்தில் 5 படையாச்சிகள் ஏன்டா நாங்க ஏற வேண்டாமுனு சொல்ற பஸ்சில ஏறி வரயாமே பற நாயே. நாங்க சொல்றத கேட்க மாட்டியா? என கேட்டு சரமாறியாக தாக்கினார்கள்.

இது பற்றி சேத்தியா தோப்பு காவல் நிலையத்தில் புகார் செய்தேன். அடிக்கடி எதற்கெடுத்தாலும் கலவரம் நடக்கட்டும் அப்போ பார்த்துக் கொள்கிறோம் என கூறி தட்டி கழித்து வருகின்றனர் காவல்துறையினர் என்று விரக்தியின் உச்சிக்கே சென்றார் தலித் இளைஞர் அருள்.



*பாதிக்கப்பட்ட அம்பாள்புரம் காலனி மாணவர்கள்*

கல்லூரி மாணவர் சங்கர் மேலும் கூறும்போது "சார் என்னுடன் கல்லூரிக்கும், வேலைக்கும், பள்ளிக்கும் போறவங்கள படையாச்சிகள்தான் அராஜகத்தால் பஸ்சில் ஏறவிடாம தடுக்குராங்க. இதனால எங்க வாழ்க்கையே கேள்விக் குறியாகிவிட்டது?" என்று கூறினார்.

"படையாச்சிங்க பன்ற சாதி கொடுமையால் எங்கள் பிள்ளைகள் பள்ளிக்கும் போகமுடியவில்லை, வேலைக்கும் போக முடியல அவுங்க படிப்பே கேள்விக் குறியாகிவிட்டது". என கண்ணீருடன் கூறினார் லட்சுமியம்மாள்.

சுதந்திர இந்தியாவில் அரசு பேருந்தில் கூட தலித் மக்கள் சுதந்திரமாக ஏறுவதை ஏற்றுக்கொள்ளாத சாதி தலைவர் ராமதாசின் தொண்டர்கள் முதல்வர் பதவியை தலித்துக்கு கொடுப்பாராம். சாதி வெறியனின் கோமாளிப்பேச்சு.

இந்திய அரசியல் சாசனத்தில் மக்கள் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் சாதி,மதம் பார்க்காமல் மக்கள் சேவை செய்ய வேண்டும் என்பதுதான் சட்ட விதி. ஆனால் அம்பாள்புரம் ஊராட்சிமன்ற தலைவரும், கரைமேடு ஊராட்சிமன்ற தலைவரும் தீண்டாமையை கடைபிடித்து சாதி மோதல்களை தூண்டும் வகையில் செயல்பட்டு வருகின்றனர்.

அவர்களை பதவி நீக்கம்செய்து வன்கொடுமை சட்டத்தின்கீழ் கைது செய்து அப்பகு தியில் தலித் மக்கள் சுதந்திரமாக பஸ்சில் பயணம் செய்ய அரசு வழி வகை செய்யவேண்டும். அப்பகுதியிலுள்ள குறிப்பாக கடலூர் மாவட்டத் திலுள்ள தலித்மக்களின் எதிர்பார்ப்பு இதையே அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் மாவட்ட தலைவர் தெய்வீகதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பதவி–


படிப்பகம்

www.padippakam.com

# வரலாற்றில் ஓர் அனுபவம்

அக்டோபர் மாதம் 5 ம்தேதி மாலை 4.10 மணிக்கு புறப்படும் கிராண்டிராங் எக்ஸ்பிரஸ் ரயில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நெருக்கடியான கூட்ட நெரிசலில் விழி பிதுங்கி மெல்ல நகர்ந்தது.

சில்லென்றகாற்று நம் மேனி தழுவியது. ஆம்! இந்துமதக் கொடுமையிலிருந்து விடுபட்டால்தான் நம்மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும் என்று சிந்தித்த அந்த தீர்க்கத் தரிசி 5 லட்சம் மக்களோடு எந்த நாகபுரி மண்ணில் 1956-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14- ம் தேதி மதம் மாறினாரோ அந்த மண்ணை நோக்கித்தான் அந்த ரயில் ஓடிக்கொண்டிருந்தது. சமத்துவம் என்பது புத்தமத அடிப்படை கோட்பாடுல்லவா? அந்த சமத்துவம் தோன்றிய நாற்றங்கால்தான் நாகபுரி!

இந்திய குடியரசுக் கட்சியின் தமிழ்மாநில தலைவர் சொல்லின் செல்வர் சக்தி தாசன் அவர்களும் புதுவை மாநில இந்திய குடியுரசுக்கட்சியின் தலைவர் திரு லெயானும் தலைமை ஏற்க லட்சகணக்கான தலித் இளைஞர்களும், பெரியோர்களும் அம்பேத்கர் வழி நடப்போரும், பௌத்தம் தழுவிய குடும்பத்தாரும் கூட்டங்கூட்டமாக ரயிலில் இடம்பிடித்திருந்தனர்.

ஆந்திரத்தை கடந்து அடுத்தநாள் விடியலில் ரயிலின் கூரை மீதெல்லாம் மக்கள் கூட்டம். 6-ம் தேதி பகல் 11 மணியளவில் நாகபுரி ரயில் நிலையத்தை அடைந்தோம். அடுத்து வந்த தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயிலிலும் பெருங்கூட்டம். இந்திய நாட்டின் எங்கெல்லாம் இருந்து நாகபுரிக்கு வருகிறதோ அந்த ரயிலிலெல்லாம் மக்கள் கூட்டம்.

மராட்டிய மாநிலத்தின் குளிர்காலக் கூட்டம் நடத்துவதற்காக நாகபுரியில் கட்டப்பட்டுள்ள அழகுமிகு பிரமாண்டமான சட்டமன்ற உறுப்பினர் மாளிகையே எங்கள் தங்குமிடமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மொழி, பண்பாடு, நடை,உடை,பேச்சு, இவற்றால்-பல்வேறுபட்ட மக்கள் பேரறிஞர் **அம்பேத்கர்** பெயரைச் சொல்லி **"மேரே பாபா அம்பேத்கர் ஜிந்தாபாத்"** என்ற லட்சோபலட்சம் குரல் விண்ணைப்பிளக்க நாகபுரி ரயில் நிலையமும், முக்கிய வீதிகளும் சட்டமன்ற உறுப்பினர் இல்லமும் வாழ்த்தொலியில் களைகட்டி நிற்கிறது.

அன்று மாலையே பாபா சாகேப் அம்பேத்கர் மதம் மாறிய புனித இடமான **"தீட்சாபூமி"** நோக்கி நடந்தோம். 5லட்சம் மகர் இனத்தவரை (தாழ்த்தப்பட்டவரை) ஒரே நாளில் புத்தமதத்திற்கு தழுவச்செய்தார் அம்பேத்கர். அசோக மன்னருக்குப் பிறகு இவ்வளவு பெரிய அளவில் மதமாற்றம் செய்தவர் அம்பேத்கரே! வழியெங்கும் மக்கள் வெள்ளம்! அதுவும் தீட்சாபூமி நோக்கி திரண்டு செல்கிறது. வெவ்வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற போதிலும், ஒன்று மட்டும் ஒன்றுபட்டிருந்தது. அது வேறெதுவுமில்லை!! "நாம் அம்பேத்கரின் மக்கள் அவர் வழி நடப்பது நமது கடமை அவர் காட்டிய பௌத்தமே நம் அறவழி" என்பதுதான் அது.

மொழி தெரியாமலிருந்தாலும், அறிமுகமே இல்லாதிருப்பினும் ஒருவரை ஒருவர் **ஜெய்பீம்!** என்று சொல்லி கை குலுக்கிக் கொள்ளும்போது-நம்மை மறக்கிறோம்-எல்லாவற்றையும் நமக்காக தியாகம் செய்து நம்மை மனிதர்களாக்க பாடுபட்ட அந்த தியாக சீலரை நினைக்கிறோம். அந்த மேதை கண்ட கனவு நனவாவதை உணருகிறோம். இவ்வாண்டு 65 லட்சம் மக்கள் கூடி வணங்கி சென்றனர்.

இந்தியாவில் மட்டுமல்லாது உலக நாடுகளிலிருந்து வரும் பன்னாட்டு பௌத்தர்களும், பௌத்த துறவிகளும் அறிஞர் பெருமக்களும் மெய்மறந்து நின்று பாபாசாகேப்பை நினைத்து வணங்குது கண்கொள்ளாக்காட்சியாகும். பார்ப்பனர்களும் சனாதனவாதிகளும், ஆதிக்கர்களும், கூடும் வடக்கத்தி கும்பமேளாவையும், தென்னாட்டு மகாமகத்தையும் இத்துடன் ஒப்பிடும்போது பல மடங்கு மிஞ்சி நிற்கின்றது. அப்படி இப்படி திரும்பாமல் நகர்ந்து செல்கின்றது நெரிசல்! என்றாலும் ஒரு சின்ன அசம்பாவிதத்திற்கும்கூட ஆட்படாத தலித் மக்கள்!

விதவிதமான பாபாசாகேப்பின் அரிய

தீட்சா பூமியில் திரளானத்தில் தமிழ் மக்கள்



www.padippakam.com

புகைப்படங்கள், வெங்கல, பித்தளை வார்ப்புகள், ஒலி, ஒளி நாடாக்கள், காலண்டர்கள், புத்தர் வரலாற்றுப் புத்தகங்கள், பாபாசாகேப்பற்றி இந்திய, உலக அறிஞர்கள் எழுதிய பல்வேறு மொழிப் புத்தகங்கள். இப்படிப்பட்ட கடைகள் தவிர வேறு எந்த கடையும் வேறு எந்த லாபங்கருதும் வியாபாரமும் அங்கு பார்க்க முடியவில்லை.

அன்பின் மாடியில் அமைதி கொள்ள வரும் தலித்பௌத்தர்களின் கூட்டம் நேரம் கடக்க கடக்க வெள்ளக்காடாக பெருகி நிற்கிறது. குப்பை மேடாக கிடந்த அந்த பூமியை கோபுரமாக்கி காட்டியிருக்கிறார் நம் அன்பிற்குரிய தலைவர் கவாய் அவர்கள்! பல ஆயிரம் மின்சார சோடிய விளக்குகளாலும், வண்ணத் தோரணங்களாலும் இரவை பகலாக்கி அந்த விகாரை ஒளி வெள்ளத்தில் ஜொலிக்க வைத்துள்ள அந்த அற்புதத்தைக்கண்டு மக்கள் மகிழ்ச்சி அடைகின்றார்கள். அற்புத சாதனைகளைச் செய்து முடித்த ஒரு போராளியின், ஒரு உயர்ந்த சீர்த்திருத்த வாதியின் சமதர்மம், மனிதநேயம் இவைக்காகவே தம் மக்களை வழி நடத்திய ஒப்பற்ற தலைவனின் உடலை பல லட்சம் மக்களின் கண்ணீருக் கிடையே எரியூட்டிய அந்தச் சாம்பல் நம் இதயத்திற்கு வலுவூட்டும் காயகல்பம்!



பிஹாரில் இருந்து **சோமலால்** என்ற ஊனமுற்ற தலித் தீட்சா பூமிக்கு 18 வது வருடமாக வந்த போது எடுத்தது. ஊனம் உடலில்தானே தவிர பேரறிஞர் காட்டிய பௌத்த பாதையின் கொள்கையில் அல்ல! என்பது அவரது வாதம்!

“ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை! மாண்டிடும் புழுவே உன் மகுடம் கா..டு!” என்று போர்பரணி பாடவைக்கும் உணர்ச்சி து...கள்! அந்த சாம்பலுக்குரிய மனிதர் தோன்றாமலிருந்தால் இந்திய மண்ணில் - நாம் சாம்பலாகிப் போயிருப்போம். அந்த மாமேதை தன்னை மெழுகு வர்த்தியாக்கிக் கொண்டு, தன் லட்சியங்களை வென்றெடுக்க போராடிய ஒரு புரட்சியாளன். இந்துமதக் கோட்பாடுகளை உடைத்தெறிந்து அன்புத்தவழும் பௌத்தத்தில் இணைய வைத்த புனிதன்! தலித் மக்கள் மகிழ்வாக வாழ தன்னை களைப்பாக்கிக் கொண்டு அந்த அற்புத விடியலில் பூபாளம் பாடிய தியாகசீலன்! தம்மம் என்ற தொட்டிலில் போட்டு நாமெல்லாம் அறிவுப்பெற்று வாழ சமத்துவ தாலாட்டு பாடிய தாய் உள்ளம் படைத்தவர்! ஆதிக்க சக்திகளின் அக்கிரமங்களிலும், சுரண்டல் வர்கத்தின் சூனியப் பார்வையிலிருந்தும் நம்மை மீட்டெடுத்த புரட்சியாளன்! அவர் பாதம் பட்ட புனித மண்ணில் நாம் நிற்கிறோம் என எண்ணும்போது அரைநூற்றாண்டு பின்னோக்கி அவரோடு வாழ்வதாகவே உணரமுடிகிறது.

மெக்கா நகரம் இஸ்லாமியர்களின் வணக்கத்திற் குரியதாகவும், ஜெருசலம் கிறுஸ்த்துவ மக்களின் வணக்கத்திற் குரியதாகவும் இருப்பதைப்போல நாகபுரிமண் பௌத்தமத மாற்றத்தின் ஊற்றுக்கண்ணாக, **தலித்துகளின் சரணாலயமாக** இருக்கிறது என்பதே உண்மை!

பழமை வாதத்திற்கு எதிராக போராடும் தலித் போராளிகள், அம்பேத்கர் சிந்தனையாளர்கள், வக்கிரபுத்திக்காரர்களால், ஜாதிவெறியர்களால் வா... விழந்துப்போன பாவப்பட்ட தலித் மக்கள், அத்தனைபேரும் அந்த புனித யாத்திரையை ஒரு கடமையாகவே கரு... பயணமேற்கிறார்கள்.

நன்னம்பிக்கை, நல்லெண்ணம், நல்வாக்கு, ந... செயல், நன்முயற்சி, நற்சிந்தனை, நற்றியானம், இ... எட்டுவிதமான புனித தன்மைகளைப்பற்றி வாழு... வாழ்வே சிறப்பாகும். மனித என்ற சொல் முழமைப் பெற்... சிறப்பேற்க இந்தபகுத்தறி... நெறிகள் அவசியமாகு... பகவான் புத்தர் இதைத்தான் போதித்தார்.

தலித் இளைஞர்கள் எந்த அமைப்பிலாவ... இருந்துக் கொள்ளுங்கள். அது உங்கள் விருப்ப... ஆனால் பகவான் புத்தரின் அறவழிக் கொள்கைகளை ஏற்று பௌத்த நெறியை பின்பற்றி வாழ முயலுங்க... அது ஒன்றுதான் உங்களை முழு மனிதனாக தோ... செய்யும் என்று நாகபுரி மண்ணில் மக்களிடை... பாபாசாகேப் அம்பேத்கர் உரையாற்றியை... மறக்கமுடியுமா?

நாகபுரிமண்! நமது சரணாலயம்! அ... தீட்சாபூமி நம் தீவினை அகற்றும் பூமி! அடு... ஆண்டிலாவது உன்னை அங்கே சந்திக்கிறேன்!

ஜெய ஜெய புத்தம்!

ஓவியர் ந. ...



படிப்பகம்

www.padippakam.com

# திறந்த மடல்

## நாயுடுகளின் சாதிவெறியாட்டத்தால் நசுக்கப்படும் சி. நம்மியந்தல் கிராம மக்கள்.

*என்ற செய்தியுடன் நமக்கு திறந்த மடல் ஒன்று வந்தது. அதை நம் களம் வாசகர்களுக்கு அப்படியே தருகின்றோம்.*

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் புதுப்பாளையம் ஒன்றியத்தில் அமைந்துள்ளது சி நம்மியந்தல் கிராமம். இங்கு 325 தலித் இந்துக் குடும்பங்களும் 25 தலித் கிறுஸ்துவக் குடும்பங்களும் 300 நாயுடு இன கிறுஸ்துவக் குடும்பங்களும் வசித்து வருகின்றன.

ஆண்டாண்டு காலமாய் மத பாகுப்பாடின்றி விலங்கினும் கேவலமாய் தலித் மக்களை கொடுமைப்படுத்துவதே ஆதிக்க சாதி நாயுடுகளின் வழக்கம்.இதுவரை நடைபெற்ற தலித் மக்கள்மீதான கொலை கொள்ளை கற்பழிப்புகள் சொல்லி மாளாதவை. வெளியில் சொல்ல திராணியற்ற புழுவாய் நெளிந்த தலித்துகளின் நிலமை ஐயோ! பரிதாபம்.

தலித் இளைஞர்கள் ஒன்றுகூடி தங்களது கிராமத்தில் தலித் மக்கள் மன்றம் திறப்பதே தங்கள் விடுதலைக்கு ஒரே வழியென முடிவெடுத்து 5-11-2000 அன்று மன்றம் திறக்க ஏற்பாடு செய்தனர். இதை சகித்துக்கொள்ளாத சாதி வெறிப்பிடித்த 100 பேர் அடங்கிய நாயுடு கும்பல் 4-11-2000 அன்று தலித் குடியிருப்புக்குள் புகுந்து தலித்துகளை மிரட்டியதுடன் மன்ற செயலர் தோழர் வெங்கடேசனை தாக்கியுள்ளனர். அவரது வீட்டிற்குள் சென்று அச்சுறுத்தியதால் ஏற்பட்ட அதிர்ச்சியில் அவரது மனைவி அலமேலுவின் வயிற்று சிசு இறந்தது. மேலும் அன்று தலித் பெரியோர் மற்றும் பெண்களை தங்களது மாதாக்கோயிலுக்கு மிரட்டி அழைத்துச்சென்று பாதிரியார் சாமுவேல் தலைமையில் பஞ்சாயத்து என்ற பெயரில் தலித் மக்களை சாதிப் பெயரைக் கூறி இழிவுப்படுத்தி பேசி மன்றம் திறந்தால் உங்களை வெட்டிவிடுவோம் வீடுகளுக்கு தீ வைப்போம் என்று அச்சுறுத்தி கேவலப்படுத்தினர் வெற்றுத்தாள்களில் கையெழுத்தும் வாங்கிக் கொண்டு விரட்டினர்.

இதுகுறித்து காவல் துறை அதிகாரிகளுக்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. அச்சுறுத்தலுக்கு அடிபணிய விரும்பாத மன்ற நிர்வாகிகள் 5-12-2000 அன்று மன்ற கொடியேற்றும் முடிவினை 2-12-2000 அன்று போளூர் சரக D.S.P. அவர்களை சந்தித்து தெரிவித்தனர். இதையும் காவல்துறை கை கூலிகள் மூலம் மோப்பம் பிடித்த ஆதிக்க சாதியினர் கடந்த 4-12-2000 அன்று மாலை கும்பலாக தலித் குடியிருப்புக்களில் நுழைந்து கேவலமாக பேசி பின்னர் 5-12-2000 அன்று லூயிஸ், சூசைராஜ், சவரய்யா, பிரான்சிஸ், ஜான், நிக்கோலாஸ் ஆகியோர் தலைமையில் சுமார் 50 பேருக்கு மேல் ஒன்றுகூடி தலித் மக்களின் ஆடுமாடுகள் வெளியேற விடாமலும் கூலி

> திருவண்ணாமலை மாவட்டம் சி.நம்மியந்தல் கிராமத்தில் நாயுடு இனத்தவர்கள் தலித் மக்கள் மீது வன் கொடுமைகளை கட்டவிழுத்து விடும் இதுபோன்ற சம்பவம் இவர்களுக்கு புதிதல்ல. காலகாலமாக தலித் மக்கள் நசுக்கப்படுவது இங்கு தொடர் கதைதான். இதற்கு முடிவு கட்டவே வழக்குரைஞர் ஆர். எல். ரொசாரியோ தலைமையில் இயங்கும் தலித் மக்கள் மன்றம் களமிரங்தியது. ஆனால் நாயுடுகளின் கும்பல் கொலை வெறி தாக்குதல்களில் இறங்கிவிட்டன. இந்த கிராமத்தை சார்ந்த பங்கிராஸ் அந்தையா நாயுடு என்ற பாதிரியார் தலித் மக்களை அழிப்பதற்கு தன்னுடைய வங்கி கணக்கில் உள்ள பல லட்சங்களில் சில லட்சங்களை வாரி இறைத்து வருகின்றார் என திருவண்ணாமலை சுற்றியுள்ள தலித் மக்கள் பலமான குற்றச் சாட்டை வைக்கின்றனர். அவர் வேலூர் கிறுஸ்துவ பிஷப்பிடம் பொருளாளராக இருப்பதும் இந்த ஊரின் மண்ணின் மைந்தர் என்பதும் குறிப்பித்தக்கது.
>
> எந்த அச்சுறுத்தல் வந்தாலும் சி. நம்மியந்தல் கிராமத்தில் மன்றம் ஆரம்பித்தே தீருவோம். கடைசி வரை போராடுவோம் என கோப ஆவேசப்படுகிறார் தலித் மக்கள் மன்ற தலைவர் ஆர்.எல். ரொசாரியோ. அதன் முதற்கட்டமாக அனைத்து தலித் அமைப்புகளையும் ஒன்றினைத்து போராட்ட களத்தில் இறங்க உள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

வேலைக்கு ஆட்கள் வெளியே செல்ல விடாமலும் தடுத்து நிறுத்தியதுடன் "போலீஸ்காரன் எங்கள் பாக்கெட்டில் போளுர் D.S.P. யிடம் மனு கொடுத்து எங்களை ஒன்றும் புடுங்க முடியாது" என்று கூறி துணை செயலர் பழனி த/பெ அல்லி என்பவரை வீட்டிலிருந்து இழுத்துவந்து சாதி பெயரை சொல்லி இழிவாகப்பேசி "கொடியேற்றவா போகிறாய்" என்று கேட்டு லூயிஸ் மற்றும் சூசைராஜ் முள் தடியால்தாக்கினர். அப்போது தட்டிக்கேட்ட பழனியின் அண்ணன் கண்ணன் என்பவரை அமல்ராஜ், சூசைராஜ் ஆகியோர் தாக்கினர். அதைப்பார்த்த தலித் பெண் சந்திரா க/பெ பரசுராமன்ராஜி, மற்றும் சேட்டு என்பவர்களையும் அடித்துக் காயப்படுத்தினர். மன்ற உறுப்பினர் ஜான் மனைவி ராணியை மிரட்டியதைக் கண்ட அவரது தாத்தா சவரி 60 வயது அதிர்ச்சியில் மாரடைப்பிற்குள்ளாகி மரணமடைந்தார். தலித் மக்கள் மீதான இத்தகைய அடக்குமுறைகளும், தாக்குதல்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இது குறித்து பல முறை உயர் அதிகாரிகளுக்கு புகார் மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

**கோரிக்கைகள்:**

தமிழக அரசே

தொடர்ச்சியாக தலித் மக்கள் மீது சாதி அடக்குமுறையை கட்டவிழ்த்துவிடும் ஆதிக்க சாதியினர் மீது தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்படி உடனே நடவடிக்கை எடு.

மன்ற தோழர்களை தாக்கிய லூயிஸ், சவரய்யா, பிரான்சிஸ், நிக்கோலாஸ், சி. ஆமல்ராஜ், சூசைராஜ் ஆகியோர் அடங்கிய சாதி வெறிக்கும்பலை உடனே கைதுசெய்

தொடர்தாக்குதல் மற்றும் சமூக புறக்கணிப்புள்ளாகி வரும்தலித்மக்களுக் குரிய பாதுகாப்பினை உடனே வழங்கு

வயிற்று சிசுவின் இறப்பிற்கும் சவரி அவர்களின் மரணத்திற்கும் காரணமானவர்கள் மீது உரிய நீதி விசாரணை நடத்தி பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணம் உடனே வழங்கு.

இறந்த தலித் கிறுஸ்தவர்களின் இறுதிமத சடங்குகளுக்காக ஆலயத்திற்குள் அனுமதிக்க மறுத்து அவர்களுக்கெனதனி கல்லறையும் ஒதுக்கி தந்திருக்கும் மதநிர்வாகத்தின் தீண்டாமை பழக்கத்தை உடனே தடை செய்.



ஆர்.எல். ரொசாரியோ

எச்சரிக்கை:

இந்த நூற்றாண்டிலும் மனித நேயத்தையும், சமூக நீதியையும் நிலைநாட்டும் கடமையை மறந்து சாதி வெறியர்களின் எச்சிலை பொறுக்கும் காவல் துறையினர், நடவடிக்கை எடுப்பதில் மெத்தனம் காட்டும் அரசுத் துறையினர், மதநிர்வாகத்தினர் அனைவரையும் வன்மையாக் கண்டிக்கிறோம். காலங்காலமாய் எங்களை அடக்கிவரும் ஆதிக்க சாதியே உங்களுடைய ஆதிக்க சாதி வெறியாட்டத்தை உடனடியாக நிறுத்தி கொள்ளா விட்டால் அதை அடக்க நாங்கள் துணிந்து விட்டோம்

நன்றி !

தலித் மக்கள் மன்றம்.

சி. நம்மியந்தல் முகாம், தி. மலை மாவட்டம்.

IACM-ன் பெண் உரிமையை பேணிவளர்ப்போம் என்ற கொள்கைப்படி அன்னை தையற்பள்ளியின் 7-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா 23-12-2000 அன்று செங்கையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விழாவில் தையற்பள்ளியின் துணை இயக்குநர் M.J. நாயகம் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். இயக்குநர் ஐயா எல். யேசுமரியான் அவர்கள் பேசும்போது ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைக்காக போராட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக பேராசிரியர் தாமஸ் அமிர்தம் அவர்கள் கலந்துக் கொண்டு மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். மேலும் விழாவில் மாற்றலாகிச் செல்லும் பேராசிரியர் தாமஸ் அமிர்தம் அவர்களுக்கு IACM-ன் சார்பில் பிரிவு உபசார விழாவும் நடைபெற்றது. இறுதியில் தையற்பள்ளியின் ஆசிரியை செல்வி அருந்ததி அவர்கள் நன்றி கூறினார்.





படிப்பகம்

www.padippakam.com

# MG

# காக்கி சட்டைகளுக்(

**எம்.ஜி.எம்** என்ற தனியார் சுற்றுலா றுவனத்தின் கைக்கூலிகளான நீலாங்கரை போலீஸ் ன்ஸ்பெக்டர் புகழேந்தி, சப். இன்ஸ்பெக்டர் க்கிரபாண்டியன் போன்றோரின் ஈனச்செயலால் இந்த ஆண்டின் தொடக்கமே தமிழகத்தின் பல மாவட்டங்களில் டென்ஷன் பற்றிக்கொண்டது.

நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பதட்டம் லவியது. ஒவ்வொரு மாவட்ட எஸ்.பி க்களும் அலர்ட் சய்யப்பட்டு காவல்துறையினரும் சி.பி.ஐ யினரும் மாப்பம் பிடிக்க தொடங்கினர். அப்படி தமிழகமே லவர பூமியாக காரணம்தான் என்ன?

பணம் அள்ளுவது மட்டுமே அந்த எம்.ஜி. ம் என்ற தனியார் சுற்றுலா நிறுவனத்தின் ஒரே றிக்கோள். அதற்கு எந்த விதத்திலாவது குந்தகம் ளைந்தால் அதற்காக எந்த விலையும் கொடுக்க யாராக இருப்பார்கள். நடுத்தர வர்க்க மக்களும், அதற்கு கீழே உள்ளவர்களையும் மயக்கி தங்கள் ற்றுலா தளத்தில் கண்டு களியுங்கள் எனக் கூறி அவர்களுடைய பணத்தை சுரண்டி கொண்டிருக்கும் ரு நிறுவனம். தினமும் குறைந்த ஊதியத்திற்கு 18 ணி நேரமும் தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி அவர்களுடைய இரத்தத்தில் கொழுத்துப்போன றுவனம்தான் எம்.ஜி.எம்.

இந்த எம்.ஜி.எம். நிறுவனத்தில் ஆனந் UALITY RESORTS என்றதோர் நட்சத்திர அந்தஸ்துள்ள ஓட்டல். இதில் ஒரு அறையின் ஒரு ாள் வாடகை சுமார் ரூ. 5,000 முதல் ரூ. 10,000 ரை ஆகும். இதில் ஏகப்பட்ட அறைகள் ருக்கின்றன. குடித்துவிட்டு கும்மாளம் பாடுவதற்கென்று தனி பார் வசதி. இதில் வரும் ாடிக்கையாளர்கள் அனைவரும் கோடிகளுக்கு சாந்தக்காரர்கள். அரசியல்வாதிகளும், பண ுதலாளிகளும் ஸ்டெப்பினி களோடு உல்லாசமாக டி குலாவுவதற்கு ஏற்ற இடமாக கிழக்கு டற்கரையோரம் அமைக்கப்பட்டுள்ள இந்த ஓட்டலில் ணிபுரியும் நூற்றுக்கும் அதிகமான தாழிலாளர்களின் பிரச்சனைகள் மட்டும் ஏராளம்.

எதற்காகவும் தொழிலாளர்கள் நிர்வாகத்திடம் ாயைத் திறக்கவே முடியாது. எம்.ஜி.எம். றுவனத்திற்கு சொந்தமான ரௌடிகள் பட்டாளமும் ங்கு உண்டு. நிர்வாகத்திடம் கேள்வி கேட்கும் தாழிலாளர்களுக்கு ரௌடிகளின் கவனிப்புகள் லவசமாக கிடைக்கும். மொத்தத்தில் இந்த தாழிலாளர்களின் உயிருக்கும், உழைப்பிற்கும் த்திரவாதம் கிடையாது.

"இம்மென்றால் வனவாசம், ஏன் என்றால் சிறை வாசம்" இதுதான் எம்.ஜி.எம் தொழிலாளர்களின் நிலை. பணி பாதுகாப்பு, பணிநிரந்தரம், ஊதிய உயர்வு ஆகியவைகளை அறிந்திடாத இந்தத் தொழிலாளர்கள் இவைகளை அடைந்திட வேண்டும் என்ற ஆவலில் நூற்றுக்கும் அதிகமானோர் ஒன்றிணைந்தனர் திட்டமிட்டனர். இதன் விளைவாகத்தான் ஜோதிபா தொழிற்சங்கம் ஆரம்பித்தனர்.

தொழிலாளர்களின் இந்த செயல் எம்.ஜி.எம் நிர்வாகத்தினரை எரிச்சலடைய செய்தது. தொழிலாளர்களுக்கு ஸ்பெஷல் கவனிப்புகள் நடந்தன ஆனாலும் தொழிலாளர்கள் அசரவில்லை. எதற்கும் துணிந்து நின்றனர். இதனால் நிர்வாகத்தினருக்கு வயிற்றில் புளியை கரைத்தது. தொழிற்சங்கம் ஆரம்பிப்பதை எப்படியாவது தடுத்து நிறுத்த துடியாய்த் துடித்தனர். தங்களுடைய பட்டாளங்களை ஏவி விட்டனர். இன்றைய ஆட்சியாளர்கள்தான் இந்த நிறுவனத்தை திறந்து வைத்தவர்கள். நிர்வாகத்தின் மூலம் அவர்களுடைய உதவி நாடப்பட்டது. ஆட்சியாளர்களும் தொழிற்சங்கமும் தடை செய்யப்படுவதற்கான அத்தனை வேலைகளிலும் இறங்கினர்.


வாகனத்தில் அணிவகுக்கும்

ஏற்கனவே நீலாங்கரை காவல்நிலையத்தில் எம்.ஜி.எம் அருகில் தொழிற்சங்க பலகை மற்றும் கொடிக்கம்பம் அமைப்பதற்கான அனுமதியும் பெறப்பட்டிருந்ததால் 28.12.2000 அன்று பிற்பகல் 3 மணியளவில் ஜோதிபா தொழிற்சங்க தலைவர் யேசுமரியான், பொதுச்செயலாளர் அசோகன் உட்பட 3000-த்திற்கும் அதிகமான தொழிற்சங்க உறுப்பினர்கள் சம்பவ இடத்தில் ஒன்று கூடினார்கள்.



தொழிற்சங்கம்

தொழிற்சங்க தலைவர் யேசுமரியான்

www.padippakam.com

# -ல்

# புத்தாண்டு பரிசு

தொழிற்சங்க பெயர்பலகையை திறந்து வைத்து கொடியை ஏற்றினார். இதற்கிடையில் பாதுகாப்பிற்காக வந்த நீலாங்கரை போலீஸ் இன்ஸ்பெக்டர் புகழேந்தி ஒயர்லஸ் மூலம் எம்.ஜி.எம் நிர்வாகத்தினரின் கட்டளைக்காக காத்துக்கொண்டு இருந்தார். தொழிற்சங்க கொடி ஏற்றப்பட்டுவிட்டது என்று கேள்விபட்ட உடனே நிர்வாகத்தினருக்கு டெம்பரேச்சர் எகிறியது.

போலீசாருக்கு ஒயர்லஸிலேயே டோஸ் விடப்பட்டது. திடீரென்று இன்ஸ்பெக்டர் புகழேந்தி, எஸ்.ஐ உக்கிர பாண்டியன் ஆகியோரின் தலைமையில் குவிக்க பட்டிருந்த இருநூற்றுக்கும் அதிகமான போலீசார் எம்.ஜி.எம் கைக்கூலி ரௌடிகளாக மாறினார்கள் தொழிலாளர்கள்மீதும், நிர்வாகிகள் மீதும் காட்டு மிராண்டிதனமான தாக்குதல்கள் நடந்தேறின. அவர்களுடன் எம்.ஜி.எம் ரௌடிகளும் தாக்குதலுக்காக களமிரங்கினர். அதுவரையிலும் தொழிற்சங்கத்தினர் அமைதிகாத்தனர். போலீசார் மேலும் வெறிக் கொண்டவர்களாக பத்துக்கும் அதிகமான தொழிலாளர் தோழர்களை கைது செய்து ரௌடிகளைபோலவே துன்புறுத்தினர்.



...ழிலாளர் தோழர்கள்

இதனைப் பார்த்துக கொண்டிருந்த மற்ற தொழிற் சங்கத்தினர் உயிரையும் பொருட் படுத்தாமல் கிழக்கு கடற்கரை சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். அமைதியாக போராட்டம் நடத்தியவர்களையும் கடுமையாக தாக்கியது காட்டுமிராண்டி போலீஸ். அப்படியும் வெறியடங்காத காவல்துறையினர் தொழிற் சங்க பெயர்பலகையை அடித்து நொறுக்கி, கொடிக்கம்பத்தையும் வெட்டி சாய்த்தனர். இது நமக்கு ஜாலியன் வாலாபாக் சம்பவத்தையே நினைவு கூற வைத்தது.



...ங்கியபோது

மறுநாள் 29-12-2000 காலையிலிருந்தே தொழிற்சங்க நிர்வாகிகளும், தலைவர், பொதுச்செயலர் ஆகியோருக்கும் தொடர்ந்து அச்சுறுத்தல், மிரட்டல் போன்கள், கொலை மிரட்டல்கள். எதற்கும் தயாராக இருந்தார்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள்.

தொழிலாளர்களின் சக்தியை நேருக்கு நேர் சந்திக்க இயலாத நீலாங்கரை காவல் துறை திரைமறைவு வேலையில் ஈடுபட்டனர். எம்.ஜி.எம் நிர்வாகத்தினருடன் இணைந்து திட்டமிட்டனர். 30-12-2000 அன்று அதிகாலையில் 4 மணியளவில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் மாநில தலைவரும், ஜோதிபா தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளருமான ப. அசோகன் அவர்களை கைது செய்தனர். அவருடைய மனைவி சுகுணா அசோகனை சாதிபெயரைச் சொல்லி அசிங்கமாக பேசி கேவலப்படுத்தினர். எம்.ஜி.எம் நிர்வாகத்திற்காக செயல்பட்ட இந்த காவல்துறையினர் பெற்ற சன்மானம் என்னவோ? எவ்வளவோ?.

மாநில தலைவர் அசோகன் கைது செய்யப்பட்ட செய்தி அன்றைய தினம் விடிய விடிய மெதுவாகப் பரவியது. 30-ம் தேதி பிற்பகல் வாக்கில் தமிழகத்தின் வட மாவட்டங்கள் முழுவதும் செய்தி பரவி, நகரங்கள் முதல் கிராமங்கள் வரை பதட்டத்தில் மூழ்கின. பல்வேறு மாவட்டங்களில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க தோழர்கள் சாலைமறியல், ஆர்ப்பாட்டம் என போராட்டங்களைத் துவங்கினர்.

31-ம் தேதியும் போராட்டம் தொடர்ந்தது காஞ்சிபுரம் மாவட்டத்தில் கேளம்பாக்கம், திருப்போரூர், மாமல்லபுரம், தாம்பரம், செங்கற்பட்டு, உத்திரமேரூர், மதுராந்தகம், செய்யூர் ஆகிய பகுதிகளில் பதட்ட நிலை ரொம்பவும் கூடுதலாக காணப்பட்டது. மாவட்ட காவல் துறையினர் திக்கு முக்காடினர். கேளம்பாக்கம், செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் சுமார் 3000 த்திற்கும் அதிகமானோர் கூடி சாலை மறியலில் ஈடுபட்டதால் கிழக்கு கடற்கரை சாலையே ஸ்தம்பித்தது. பழைய மகாபலிபுரம் சாலை காலியானது. கடைகள் அடைக்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார், வந்தவாசி, தேவிகாபுரம், ஆரனி, போளூர் போன்ற பகுதிகளில் தலைவர் அசோகன் கைது செய்யப்பட்டதை அறிந்த உடனேயே பதற்றம் பற்றிக்கொண்டது. பேருந்துகள் தடை செய்யப்பட்டன, போலீசாரை கண்டித்தும் தலைவரை விடுதலை செய்யக் கோரியம் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. ஒரு

www.padippakam.com

சில பகுதிகளில் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர். செய்யாறு மற்றும் வந்தவாசி போன்ற பகுதிகளில் கல்லூரி மாணவர்களும் மற்ற தலித் அமைப்பை சார்ந்த தோழர்களும் போராட்ட களத்தில் இறங்கினர். ஆங்காங்கே ஆர்பாட்டங்கள் நடைபெற்றன.

விழுப்புரம் மாவட்டம்-தேசிய நெடுஞ்சாலை குறி வைக்கப்பட்டது. தென் தமிழகத்திற்கு போகும் அத்தனை வாகனங்களும் தடை செய்யப்பட்டன. தொடர்ந்து நான்கு நாட்களாக இந்த போராட்டம் நீடித்தது. கண்டன போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. மற்ற மாவட்டத்தை விட இந்த மாவட்டத்தில்தான் போலீஸ் அதிகமாக குவிக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க நிர்வாகிகள் போலிசாரின் கண்களில் மண்ணை தூவியதுதான் ஐ லைட். நிர்வாகிகளை தேடிய போலிசார் பெண்களிடம் செமத்தியாக வாங்கி கட்டிக்கொண்டதுதான் மிச்சம்.

எப்பவுமே கலவர பகுதியாக காணப்படும் கடலூர் மாவட்டம் இச்சம்பவத்தால் மேலும் பதட்டமானது. எப்போழுது என்ன நடக்கும் என யாருமே அறியாதிருந்தனர். இதனால் இம்மாவட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தை போலவே போலீசார் மிக அதிகமாக குவிக்கபட்டிருந்தனர். அதையும் மீறி



போராட்டத்தில் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்

இயக்க தோழர்கள் , நிர்வாகிகள் பண்ருட்டி, கடலூர் போன்ற பகுதிகளில் போராட்டம் நடத்தியது காவல்துறையினரையே அதிரவைத்தது.

தலித் மக்கள் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதனை எம்.ஜி.எம் நிர்வாகதினர் அறிந்திட போகும் காலம் வெகு தூரமில்லை. அதை உணர்த்த வேண்டிய தமிழக அரசும், காவல்துறையும் பிச்சைக்காசுக்கு ஏங்கி நிற்கின்றன. தேர்தல் நெறுங்கி விட்டது பணமுதலாளிகளுக்கும், கடத்தல் காரர்களுக்கும் துணைபோகின்ற இன்றைய ஆட்சியாளர்களுக்கு நிச்சயம் பாடம் புகட்டுவோம் என கொதித்தெழுகின்றார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்

–சிந்தை ஆர்



# மருத்துவம்

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பதை அறிவோம். பேன்களுக்காக படை நடுங்கிய வரலாறு தெரியுமா? பேன்களினால் பரவக்கூடிய நோயின் பெயர் டைபஸ். நெப்போலியன் படைகள் மாஸ்கோவை முற்றுகையிட புகுந்த நேரம், அவரது படை வீரர்கள் பெரும்பாளானவர்களுக்கு டைபஸ் நோய் வந்துவிட்டது. அதனால் நெப்போலியன் படைகள் மாஸ்கோவை விட்டு வெளியேற வேண்டி இருந்தது.

1917–1922 ல் ரஷ்யாவில் மட்டும் இந்த டைபஸ் நோயல் 2.5 கோடி பேர் இறந்து விட்டனர். அதனால்தான் மாமேதை லெனின் சோஷலிசம் பேன்களை தோற்கடிக்கும் என்று குறிப்பிட்டார்.

மனிதனைப் பாதிக்கும் பேன்களில் மலைப்பேன், சீலைப்பேன், நண்டுப்பேன் அல்லது இடுப்புப் பேன் என மூவகைகள் உள்ளன. பேன்களின் உணவு இரத்தம்தான்.

பேன் மனிதனைக் கடிக்கும்போது மனிதன் அதை கொல்கிறான். அதன் மலம் மனிதனின் தோலின்மீது படும்போது அதன்மூலம் நோய்கிருமி நம் உடலுக்கு சென்று நோய் வரக் காரணமாகிறது.

அ) டைபஸ் ஜூரம் : ரிக்கெடியா புரோவசாகி என்ற கிருமி மனித உடலுக்குள் சென்று இந்நோய் வருகிறது. இந்நோயால் பாதிக்ப்பட்டவர்கள் ஜூரம், தலைவலி, இருமல், உடல்வலி, மனக்குழப்பம், வந்து மிகவும் பாதிப்படைகிறார்கள். மிகவும் மோசமான இருதய, சிறுநீரக நோயினால் இறக்கவும் நேரிடலாம்.

ஆ) பலமுறை திரும்ப வரும் காய்ச்சல் : பொரிலியா என்ற கிருமி பேனை கொல்லும்போது வெளிப்பட்டு மனித தோலின் உள்ளே ஊடுருவிச் செல்கிறது. இந்நோயால் உள் உறுப்புகளில் இரத்தக் கசிவு, குறை இரத்த அழுத்தம், இருதய செயலிழப்பு போன்றவற்றை ஏற்படுத்தும்.

இ) அகழிக்காய்ச்சல் – டிரென்ச் ஜூரம் : முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் சமயங்களில் படை வீரர்களிடம் பரவி இருந்தது. ஐந்து நாள் ஜூரம் என்றும் அழைக்கப்படும் இக்காய்ச்சல் 10 லட்சம் பேருக்கு வந்தது. உயிருக்கு ஆபத்தை விளைவிக்காதது. இந்த நோய்கள் அல்லாமல் பேன்கடித்த இடத்தில் சொரிவதாலும், ஒவ்வாமையும், அழற்சியும் ஏற்படுகிறது.

நண்டு பேனால் நோய் வராது. பொது குளியலறைகள், கழிப்பறைகள், வீடுகளிலுள்ள சுத்தமில்லாத அறைகள் ஆகிறவற்றிலிருந்து இவ்வகைப்பேன்கள் தொற்றிக்கொள்ளும்.

தலைப்பேன், நண்டுப்பேன், இவற்றை ஒழிக்க 5 சதம் மாலத்தியான் லோஷன் 12 முதல் 24 மணி நேரம் தலையில் தடவி வைத்து விட்டு பின் தலைக்குளிக்க வேண்டும். இதை சரியாகப் பயன்படுத்தினால் பேனும், ஈறும் போய்விடும். கார்போரில் கலந்த பவுடரும் பேனைப் போக்க பயன்படுகிறது.

பேனை ஓட்ட சுத்தம் மிகவும் அவசியம். இந்தியா போன்ற தட்பவெப்ப நிலை உள்ள நாட்டில் தினமும் சோப்பு போட்டு நன்றாக குளிக்க வேண்டும். கந்தையானாலும் கசக்கி கட்டு என்பது போல் துவைத்த ஆடைகளையே உடுத்த வேண்டும். ஆடைகளை, டவல்களை படுக்கை விரிப்புகளை வெந்நீரில் ஊரவைத்த சோப்பு போட்டு துவைத்து சூடான சலவை செய்ய வேண்டும். சுத்தம் சோறுபோடும் என்பார்கள். அது உண்மையோ இல்லையோ ஆனால் நிச்சயம் பேன்களை ஓட்டும்.



படிப்பகம்

www.padippakam.com

44. குடிமக்கள் அனைவருக்கும் ஒரே சீரான உரிமை இயல் சட்டத்தை இந்தியா முழுவதும் அமல் செய்வதற்கான முயற்சிகளை' அரசு எடுக்கவேண்டும்,

45. இந்த அரசியல் சாசனம் துவக்கப்பட்டுப் பத்தாண்டு களுக்குள் குழந்தைகள் அனைவரும் பதினான்கு வயது முடிவடையும் வரையில் இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வி பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும்,

46. பிற்பட்ட மக்களிடையே, அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை மிகுந்த அக்கறையோடு அமல் படுத்தவேண்டும். சமூக அநீதிகளிலிருந்தும், எல்லா வகையான சுரண்டல்களிலிருந்தும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கபட வேண்டும்.

47. உணவுச் சத்துக்களை மேம்படுத்தவும், அடிப்படை வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும், நல்வாழ் வினை உயர்த்தவும் தேவையானவற்றைத் தமது தலையாய கடமைகளாக அரசு கருத வேண்டும். அதிலும் குறிப்பாகப் போதையூட்டும் மதுவகைகளையும் உடலுக்குத் தீங்கு பயக்கும் நச்சுப் பொருள்களையும், மருந்துக்காக அன்றி வேறு விதமாகப் பயன்படுத்து வதைத்தடை செய்வதற்காக மதுவிலக்கை அமல்படுத்த முயற்சி செய்ய வேண்டும்,

48. வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ச்சிக்காக நவீன விஞ்ஞான முறைகளைப் புகுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக உயர்ரக கால்நடை களைப்பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும், பசுக்கள், கன்றுகள் மற்றப் பால் தரும் விலங்குகள், வறட்சியுற்ற கால்நடைகள் ஆகியவற்றை வதை செய்வதைத் தடுப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும்,

48. தேசத்திலுள்ள காடுளையும் காட்டு விலங்ககளையும் மற்ற உயிரினங்களையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அரசு முயற்சி எடுக்கவேண்டும்.

49, வரலாற்று அல்லது கலை, பண்பாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படும் பொருள்களையும் நினைவுச் சின்னம் ஒவ்வொன்றையும் அத்தகைய இடங்களையும் பாதுகாக்க வேண்டும், அவற்றைத் தேசீய முக்கியத்துவம் வாய்ந்தவை என்று கருதி, அழிவினின்றும், களவாடப்படுவத னின்றும், அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதனின்றும், சேதாரப் படுத்தபடாமலும், உருக்கு வைக்கப்படாமலும் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும், நாடாளுமன்றத்தில் அதற்கான சட்டம் இயற்றலாம், மற்றும் அறிவிப்புகள் செய்ய வேண்டும்,

50. அரசு தமது பொதுப் பணிகளில் நீதித்துறையிலிருந்து நிர்வாகத்தைத் தனியே பிரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

51. அரசு,

(அ) உலக நாடுகளுக்கிடையில், சமாதானத்தையும் பாதுகாப்பையும் வளர்ப்பதற்கும்,

(ஆ) நாடுகளுக்கிடையே, நியாயமானதும், கௌரவமானதும் ஆன நட்புறவுகளைப்பராமரிக்கவும்,

(இ) மக்கள் அமைப்புகள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்வதற்கேற்ப சர்வேதச் சட்டங்களுக்கும், உடன்படிக்கை களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உரிய மரியாதை செலுத்துவதற்கும்,

(ஈ) சர்வேதசத் தகராறுகளை, நடுவர்களின் தீர்ப்புக்குச் சமர்பிப்பதை ஊக்குவிப்பதற்கும்,

தேவைப்படும் முயற்சிகளை அவ்வப்போது எடுத்துக் கொள்ள வேண்டும்,

51 A இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரும்

(அ) அரசியல் சாசனத்திற்கு கட்டுப்பட்டு நடக்கவும் அதன் நோக்கங்களையும், அதன்படி உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகளையும் தேசியக் கொடியையும், தேசிய கீதத்தையும் மதிக்கவும்

(ஆ) நமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தூண்டுகோளாக அமைந்துள்ள புனிதமான கொள்கைகளைப் போற்றவும் பின்பற்றவும்

(இ) இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைபாட்டையும் ஒப்புயர்வுற்ற தன்மையையும் நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும்

(ஈ) தேசத்தை பாதுகாப்பதற்கும், அப்படி அழைக்கப்படும்போது தேசத்திற்கு சேவை செய்ய முன் வரவும்

(உ) சமயம்,மொழி, பிராந்தியம் அல்லது குறுகிய பிரிவுகளைத் தாண்டி வந்து, இந்தியமக்களிடையே சகோதரத்துவத்தையும் ஒன்றுபட்ட உணர்வையும் உண்டாக்கவும் பெண்களின் கண்ணியத்தைக் களங்கப்படுத்தும் பழக்கவ முக்கங்களை தவிர்க்கவும்

(ஊ) நமது விலைமதிப்பற்றதும் பல்வகைப்பட்டதும் தொன்றுதொட்டு வருவதும் ஆன பண்பாடுகளை மதிப்பதற்கும் காப்பதற்கும்

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், காட்டுவிலங்குகள் மற்ற உயிரினங்கள் உள்பட உள்ள இயற்கைச் சுற்றுச் சார்புகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் மற்றும் உயிரினங்களிடத்தில் பரிவு காட்டவும்

(ஏ) விஞ்ஞான ரீதியான அணுகுமுறை, மனிதாபிமானம் மற்றும் ஆராய்வு ஊக்கம், சீர்த்திருத்தம் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் காப்பதற்கும்

(ஐ) பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் வனமுறை கண்டு அஞ்சி விலகுவதற்கும்

(ஒ) முன்னேற்ற பாதையில் நாடு முனைந்து வெற்றி பெறத் துறைகள் அனைத்திலும் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் சிறப்படையமுயற்சி செய்வதற்கும்.

ஆவன புரிவதைத் தமது கடமையாக எடுத்துக்கொள்ள வேண்டும்

தொடரும்....

வழக்குரைஞர், பழனிச்சாமி M.A. B.L செங்கை

www.padippakam.com

# தாழ்த்தப்பட்டவர்களை ஒழித்துக்கட்ட ஒரு மகா கூட்டணி

அன்று தீபாவளி திருநாள். திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு அருகில் உள்ள மு. வாடிப்பட்டி கிராமத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்களும் பட்டாசு வெடித்து பலகாரங்கள் செய்து மற்றவர்களைப் போலவே ஆடிப்பாடி உற்சாகமாக தீபாவளியை கொண்டாடிக் கொண்டிருந்தனர். இவர்களுடைய இந்த உற்சாகம் தங்களின் கண்களில் வெடிவைத்தார்ப் போன்று உணர்ந்தனர் சாதி இந்துக்கள். "பறையன், பள்ளன், சக்கிலி நாய்களுக்கெல்லாம் ரொம்பவும் திமிர் ஏறிப்புடுச்சிடா இவனுங்களை இப்படியே விட்டா ஏறி தலமேல உட்கார்ந்துடுவானுங்க" என தேவர், மறவர், கவுண்டர், வெள்ளாளர், செட்டியார், பண்டாரம், நாடார், சேர்வை, உள்ளடக்கிய சாதி இந்துக்களின் மகாகூட்டணிக்கு ஏகப்பட்ட டென்ஷன்.

தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவர், ஊரின் பொது இடத்தில் வைத்த வெடி தேவர் சாதிப் பெண்ணின் மீது பட்டு விட்டதாக நடக்காத ஒன்றை கூறி கரடி விட்டனர் சாதி இந்துக்கள். இதையே தங்கள் டென்ஷனை காட்ட ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டனர்.

இதற்காக 26.10.2000 அன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக ஊர்க்கூட்டம் போடப்பட்டது. சாதி இந்துக்களின் கூட்டணியில் உள்ள அனைத்து சாதியினரும் தாழ்த்தப்பட்ட மக்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென ஒருமித்த கருத்துக்கு வந்தனர். தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு தாக்குதலுக்கான தேதியும் மறுநாள் (27-10-2000) என்று குறிக்கப்பட்டது.

மறுபுறம் தாழ்த்தப்பட்ட மக்கள் விடிந்தவுடன் நடக்கப்போகும் விபரீதத்தை அறியாமல் உறங்கிக் கொண்டிருந்தனர். விடிந்ததும் தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்களுடைய வேலையை கவனிக்க சென்றனர். இந்நேரத்தில் சாதி இந்துக்கள் ஏறக்குறைய மூவாயிரம்பேர் கட்டை, கத்தி, வீச்சறிவாள், கம்பி போன்ற கொடிய ஆயுதங்களோடு ஒன்று திரண்டு தாழ்த்தப்பட்ட குடியிருப்புகளை நோக்கி நடந்தனர். அவர்களில் ஒருசிலர் மண்ணெண்ணெய் டின்களோடு வந்திருந்தனர். கண்ணில் பட்ட தாழ்த்தப் பட்டோரையெல்லாம் அடித்து நொறுக்கினர். கம்பியால் குத்தினர், இதில் வேலு என்பவரின் உடல் கடப்பாரையால் பதம் பார்க்கப்பட்டது, பாலமுருகனின் மண்டை சின்னாபின்னமாக்கப்பட்டது. ஆகம்மா, பஞ்சு, குப்பம்மா, காளியம்மாள் உட்பட பலர் மண்டையிலும் வயிற்றிலும் உடலின் பல பாகங்களில் தாக்கப்பட்டு உயிருக்கு போராடுகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. சாதி இந்துக்களால் அத்தனை அட்டூழிங்களும் அரங்கேற்றிய பின்னர்தான் தமிழ்த்திரைப்படத்தில் வருவதுபோன்று, காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தனர்.

வந்தவர்களும் வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல பாதிக்கப்பட்ட தாழ்த்தப் பட்டவர்களையே கைது செய்தனர். ஒப்புக்காக சாதி இந்துக்களில் ஒரு சிலரை மட்டும் கைது செய்தனர். அதிலும் தாழ்த்தப்பட்டவர்கள் எளிதில் உறவினர்கள் சென்று பார்க்க முடியாத அளவிற்கு திருச்சி சிறையில் வைக்கப்பட்டனர். ஆனால் சாதி இந்துக்கள் அருகில் உள்ள மதுரை சிறையில் அடைக்கப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

காவல்துறையினர் நடந்துக் கொண்ட விதம் தாழ்த்தப்பட்டோரை மேலும் பாதிப்படைய செய்துள்ளது. நடப்பதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு பிறகு படைகளை குவிப்பது எதற்காக? தாழ்த்தப்பட்டோரிடையே உளவியல் ரீதியாக அச்சத்தை ஏற்படுத்தவே படைகுவிப்பு வழி கோலுகிறது. எல்லாம் எரிந்து முடிந்த பிறகு, வந்து சேர்ந்துள்ள காவலர் பட்டாளமும் தீயணைப்பு வண்டியும் பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது வேடிக்ககைப் பார்த்துக் கொண்டிருந்த ஆள்வோரின் கையாளாகாத போக்கினையே நினைவூட்டுசிறது. தாக்குதல் தொடுப்போரையும், தாக்கப்பட்டோரையும் ஒரே தட்டில் வைத்து பார்க்கும் காவலரின் பார்வையில் பழுதுகள் ஏராளம்.

சாதி இந்துக்களுக்கு, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறி வருவது பொறாமையையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தாழ்த்தப் பட்டோர்களின் கடைகள், மாட்டுவண்டிகள், மாடுகள் போன்றவை குறிவைத்துத் தாக்கப்பட்டுள்ளன. பொருளாதார ரீதியாக அவர்கள் ஓரளவு முன்னேறு வதைக்கூட சாதி வெறியர்களால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இக்கொடிய வெறியாட்டம் திடீரென்றோ தற்செயலாகவோ நிகழவில்லை. ஊரே கூடி முடிவெடுத்து தாக்குதல் தொடுத்துள்ளது. பல்வேறு சாதிகளால் பிரிந்துக் கிடக்கும் இவ்வூரார், தாழ்த்தப்பட்ட மக்களை தாக்குவதென்று முடிவான பிறகு அனைவரும் ஒரே குடையின் கீழ் சேர்ந்துள்ளது சாதிய அமைப்பின் கொடிய முகத்தை காண்பிக்கின்றது.

தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தங்களுக்கென்று சிறிய விளையாட்டு கூடம் அமைக்க முனைந்துள்ளனர். உடற்பயிற்சியில் ஈடுபடுவது கூட சாதி வெறியர்களின் கண்களுக்கு குற்றமாகவே படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று போடப்பட்ட சாலையும் சாதி வெறிக்கும்பலின் கண்களை உறுத்தி வந்துள்ளது. பொருட்களை சூறையாடுதல், மனிதவேட்டை, கால்நடைகளுக்கு சேதம் விளைவித்தல், தொழில் மறுப்பு, வேலைமறுப்பு போன்றவற்றில் இறங்கியுள்ளனர். கலைஞரின் செல்லரித்துப்போன சமத்துவபுரத்திற்குப் போகும் வழியில்தான் இவ்வளவும் நடந்தேறியுள்ளன. சாதிவெறியை, கட்சிகள் திட்டமிட்டு வளர்க்கின்றன. இத்தகைய மோதல்களின்போது மௌனம் காக்கின்றன. அரசும், காவலரும் தங்களின் கையாலாகாத போக்கினை மூடிமறைக்கின்றன. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஏராளமாய் இருந்தும் எதுவும் களமிறங்கவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்குக்கூட பலரும் தயங்குகின்றனர். சாதி இந்துக்கள் இம்மக்களை வேலைக்கு அமர்த்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளனர். பிறரையும் உதவி செய்ய அனுமதிப்பதில்லை அத்துமீறி வீடுகளுக்குள் புகுந்து தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப்பெட்டி, பண்டபாத்திரங்கள் போன்றவற்றையெல்லாம் கிணற்றில் போட்டுள்ளனர். ஆடுமாடுகளை வெட்டி சாய்த்துள்ளனர்.


கொளுத்தப்பட்ட வீடுகள்

முடிவெட்டும் கடை ஒன்றையும் தீக்கிரையாக்கியுள்ளனர், ஊனமுற்ற பெண் பயன்படுத்தும் வண்டியை, தையல் இயந்திரங்களையும் நொறுக்கியுள்ளனர். பல வீடுகள் பூட்டிக்கிடக்கின்றன, பிள்ளைகள் பள்ளிக்கு செல்ல இயலாத நிலை தோன்றிவிட்டது. அடுத்த நாள் நடக்க இருந்த திருமணம் நின்றுபோயிருக்கிறது திருமணத்திற்காக வாங்கிவைத்த பொருட்கள் அனைத்தும் சூறையாடப்பட்டுள்ளன.

பாதுக்காப்பற்ற சூழலில் தாங்கள் வாழ்வதாக தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்கின்றனர். அரசியல் கட்சிகளும் அமைதி காப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். தலித் மக்கள் பதுங்கி பாயக்கூடியவர்கள் என்பது இவர்களுக்கும் உணர்த்த வேண்டிய நாட்கள் தொலைவில் இல்லை.

- நமது நிருபர்



படிப்பகம்

www.padippakam.com


# ன்றாம் உலகப்போர் வெடிக்குமா?

நீரின்றி அமையாது உலகு
விசும்பின் துளி வீழின் அல்லால் மாற்றாங்கே
பசும்புல் தலைக்காண்பது அரிது.

வானத்தில் இருந்து துளி நீர் விழவில்லை னில் பசும்புல் கூட தன் தலையை வெளியே ட்ட இயலாது என்று சொல்கிறார் வள்ளுவர்.

இன்று தண்ணீர்உலகம் முழுவதும் தங்கத்தை ட விலை உயர்ந்துவருவது குறிப்பிடத்தக்கது. ப்பதற்கு பாதுக்காக்கப்பட்ட நீர் கிடைக்கவில்லை ல் அதிக அளவு நச்சுப்பொருட்களும் ிமிகளும் கலந்துள்ளன. ஆகவே ரை காய்ச்சி வடிக்கட்டி பருக ண்டும் என அரசுகளே ிவிக்கின்றன.

ஆனால் ! மறுபக்கத்தில் றகை உணவை வலியுறுத்து ர்கள், நீரை காய்ச்சி குடித்தால் தில் உள்ள சத்து பொருட்களும் ன் உயிர்த்தன்மையும் பாதிக்கும் வாதிடுகின்றனர். நீரின் மீது ல்ட்ராவைலட் கதிர்களை பாய்ச்சி மினரல்களையும் சேர்த்து கிரிமி கப்பட்ட நீர் என்று பாட்டில்களில் டைக்கப்பட்டு மினரல் வாட்டர் என்ற பரால் நமது தலையில் கட்டப்படுகின்றன. இன்று! லிட்டர் பால்விலை பத்து ரூபாய்க்கு கப்படுகிறது. குடிநீரின் விலையோ லிட்டர் 12 ல் 16 ரூபாய் வரை மினரல் வாட்டர் என பனை சரக்காகியுள்ளது.



சென்னை போன்ற மிகப்பெரிய நகரங்களில் மத்திய தர வர்க்க குடும்பத்தினர் நாளொன்றுக்கு ண்டு 12 லிட்டர் தண்ணீர் கேனுக்கு 40 ரூபாய் லவு செய்கின்றனர்.

மாதத்திற்கு ரூ 1200 வீதம் வருடத்திற்கு நீருக்காக மட்டும் சுமார் ரூ-15 ஆயிரம் ஒரு ம்பத்தினர் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. நீருக்கு செலவு செய்யும் பணத்தில் 4 சவரன் க நகையை வாங்க முடியும். கொஞ்சம் வசதி டத்தவர்கள் லாரி தண்ணீருக்கு என்று வருடத்திற்கு லட்சம் ரூபாய் வரை தங்களது பட்ஜெட்டில் ஒதுக்குகின்றனர். இன்று குடிநீர் முற்றிலும் பண்ட பொருளாக மாறிவிட்டது. நாம் சுவாசிக்கும் காற்று மட்டுமே இலவசமாக கிடைக்கிறது. அதுவும் சுத்தமான காற்றல்ல என்பது வேதனையான விஷயம்.

காவிரி, வைகை, பாலாறு, போன்ற தமிழகத்தில் பாயும் நதிகள் இன்று நீர் புரண்டு ஓடும் ஆறுகளாக இல்லாமல் புதர்கள் மண்டி மண்மேடுகளாகி, சாக்கடை நீரை சுமந்து செல்கின்றன. இதில் கர்நாடக-தமிழக மக்களின் பற்றி எரியும் பிரச்சனை காவிரி நதிநீர் குறித்த ஒப்பந்தம்தான்.

1921-ல் மைசூர் அரசு சார்பில் கிருஷ்ணராஜ சாகர் அணை கட்டவும், சென்னை மாகாணத்தில் மேட்டூர் அணையை நிறுவவும் திட்டமிடப்பட்டது. இரண்டு அரசுகளும் இணைந்து 1924-ல் ஒரு ஒப்பந்தம் செய்துக் கொண்டன.

இந்த ஒப்பந்தத்தை50 ஆண்டுகள் கழித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதும் ஒப்பந்த ஷரத்து. ஒப்பந்தத்தில் கிருஷ்ணராஜ சாகரில் மைசூர் அரசு அணைக்கட்டி 45 டி.எம்.சி தண்ணீரை தேக்கிக் கொண்டு ஒன்னேகால் லட்சம் ஏக்கருக்கு பாசன வசதியை செய்து கொள்ளலாம். தமிழ்நாட்டுக்கு எந்த பாதிப்பும் இல்லாதவாறு பாசன வசதிக்காக நீரை திறந்து விடுவது முறைப்படுத்தவேண்டும். தமிழகத்தில் மேட்டூரில் அணைக்கட்டுவதோடு அனல் மின் நிலையம் அமைத்துக்கொள்ளலாம். அணையில் 93.5 டி.எம்.சி அளவு தண்ணீரை தேக்கிக்கொள்ளலாம். தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட கொள்ளளவுத் தண்ணீருக்கு 60 விழுக்காடு அளவு நீரை தேக்கி கொள்ள புதிய அணைகளை மைசூர் அரசு கட்டிக்கொள்ளலாம் ஆனால்! அணைகளைக் கட்டுவதற்கு சென்னை மாநில அரசின் அனுமதி வேண்டும் என்பது ஒப்பந்த விதி. ஆனால் ! ஓப்பந்தம் எல்லாம் காற்றில் பறக்க விடப்பபட்டது.

கங்கை நீரை பங்கு போடுவதில் பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையேயும் தாவா நடைபெற்றது. அதேபோல சூயஸ் கால்வாய்


படிப்பகம்


www.padippakam.com

பிரச்சனையில் மேற்கத்திய நாடுகளுக்கிடையேயும் மோதல்கள் நீடித்த வண்ணம் உள்ளன.

சிங்கப்பூரில் குடிநீர் இல்லாததால் அண்டை நாடுகளான இந்தோனேஷியா, மலேஷியா ஆகிய நாடுகளிலிருந்தும் பெரிய குழாய்கள் மூலம் நீர் சிங்கப்பூருக்கு ஏற்றுமதியாகிறது. நூறு ஆண்டுகளுக்கு என இதற்கான ஒப்பந்தமும் போடப்பட்டுள்ளது. ஆனால்! இந்தோனேஷியாவும், மலேஷியாவும் தண்ணீரை நிறுத்தி விடுவோம் ஜாக்கிரதை என்று சிங்கப்பூரை அடிக்கடி மிரட்டி வருகின்றன. மேற்கண்ட இருநாடுகளும் ஒரே ஒருநாள் தண்ணீர் வழங்குதை நிறுத்தினால் சிங்கப்பூர் மக்கள் மற்றும் அரசின் கதியென்ன யோசித்தப்பாருங்கள். காரைக்குடி நகருக்கு தண்ணீர் வழங்க பல லட்சம் செலவில் குழாய்கள் பதிக்கப்பட்டு முற்று பெற்றது. ஆனால்! ஆற்றிலிருந்து நீரை எடுக்கக்கூடாது என பல கிராமங்களும் அரசியல் கட்சிகளும் போராட்டத்தில் குதித்தன.


அதேபோல்! பாலாற்றிலிருந்துதான் சென்னை மாநகரை ஒட்டியுள்ள ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் போன்ற பகுதிகளுக்கு குடிநீர் குழாய் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. எங்களுக்கு குடிநீர் வசதி தரவில்லை என்றால் சென்னையை நோக்கி செல்லும் குடிநீர் பைப்புகளை வெட்டி நாங்களே தண்ணீரை எடுத்துக்கொள்வோம் என சிங்கப்பெருமாள் கோவில், கூடுவாஞ்சேரி போன்ற பகுதி மக்கள் போராட்டம் நடத்தியது உண்டு.

செங்கை நகரிலிருக்கும் 65 ஆயிரம் மக்களின் குடிநீர் ஓரியன் சாராய தொழிற்சாலையின் கழிவு கலந்து வருவதாலும் கோடை காலங்களில் குடிநீரே கிடைக்காமல்



அவதிப்பட்ட போதும் சென்னை போன்ற பகுதிகளுக் பாலாற்றிலிருந்து குடிநீரை சுரண்டாதே, நாங்க தடுப்போம் என்ற குரல் ஒலித்ததை மறக்குமுடியா

முன்னால் தமிழகம் மற்றும் ஆந்தி முதல்வர்களான எம்.ஜி.ஆரும், என்.டி. ஆரு கிருஷ்ணா நீரை சென்னைக்கு குடிநீராக வழங்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஆனால்! இன்று கிருஷ்ணா நீரை சென்னைக்கு கொண்டு வருவதி ஏகப்பட்ட சிக்கல்கள் உள்ளன. கிருஷ்ணாநீ சென்னைக்கு வழங்கா என்று சென்னைக் கிருஷ்ணாநீர் வரு கால்வாய் பகுதியி இருக்கும் விவசாயிக போராட்டம் இன்று நீடிக்கிறது.







பக்கத்து தெரு லிருக்கும் நபர் வே தெருவில் வரும் தண்ணீ பிடிக்கும்போதும் ஒ தெருவில் பக்கத் வீட்டுக்காரன் குழாய் மாற் பிடிக்கும்போதும் ஏற்படு சண்டைகளும், சச்சரவுகளும் நம தினசரி அனுபவம் அல்லவா? ஆடு மாடும், பன்றியும் நக்கி குடிக்கு மனித கழிவுகள் மிதக்கும் ஆற் குளம், கிணற்று தண்ணீ ஒடுக்கப்பட்ட பஞ்சமர்க தொட்டாலும் தீட்டு என்று தனித்த கேணிகளும் குவளைகளும் நீடிப்பதும் குடிநீர காகத்தானே.

பல கிராமங்களில் தலித் பகுதிகளுக் கொண்டு செல்லும் குடிநீர் பைப்புகள் சு மேல் சாதிக்காரர்கள் வசிக்கும் வழி புதைக்கக்கூடாது என்பதற்கு எதிர்ப்பு அடிதடியும், இரண்டாயிரம் நூற்றாண்டிலு தொடர்வது கொடுமையல்லவா. டாக் அம்பேத்கர் குழந்தை பிராயத்தில் பள்ளியி படித்தபோது தனிப்பானையும், தனிக்குவளைய ஒதுக்கபட்டபோது அவரது நெஞ்சில் எழுந்த மாபெரும் தீண்டாமை கொடுமைக்கு எதிரான நெருப்


அவரின் நூற்றாண்டை கொண்டாடிய சமய சேலத்து பள்ளி மாணவி தனம் தனிக்குவளையி தண்ணீர் குடிக்கவில்லை என்பதற்காக கண் ஒன் ஆசிரியரின் பிரம்படியால் பறிபோனது எத்தன வேதனையானது.விஞ்ஞான கூட்டுப்பொருள

www.padippakam.com

தண்ணீரால் இன சண்டை, நாடுகளுக்கிடையே பதட்டம், சாதிதுவேஷம், தீண்டாமை கொடுமை இன்னும் எத்தனை எத்தனையோ இந்த சிக்கல்கள் தீர இன்னும் பல திட்டங்கள் வேண்டும்.

ரஷ்யாவில் டான், வால்கா என்ற இரண்டு மாபெரும் நதிகள் இணைக்கப்பட்டன. அதே பாணியில் வற்றாத ஜீவநதிகளான கங்கை, யமுனை, மகாநதி, கோதாவரி ஆகியவைகளை காவிரியுடன் இணைக்க முடியும். கங்கை-காவிரி இணைப்பு மூலம் தென் தமிழ்நாட்டில் தாமிரபரணி வரை பாசன வசதி பெறும் என்று முன்னால் நீரப்பாசன அமைச்சர் கே.எல். ராவ் கருத்து தெரிவித்துள்ளார். இதனால் கங்கையிலிருந்து கடலில் வீணாக கலக்கும் 30 கோடி ஏக்கர் குடிநீர் கடலில் கலப்பது தடுக்கப்படும். கால்வாய் வெட்டும் பணியில் 1 கோடியே 50 லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்.

1600 மைல் நீளம் கங்கை-காவிரி இணைப்பு கால்வாய் வெட்ட 1974-ம் வருட திட்டப்படி 7 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என கேப்டன் தஸ்தூர் மதிப்பீடு செய்தார். நமது நாட்டில் வருடம் தோறும் வெள்ளம், புயல், வறட்சிக்காக பலநூறு கோடி ரூபாய் செலவு செய்யப் படுகிறது. கங்கை-காவிரி இணைப்புக்கு இன்று சுமார் 20 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகலாம். அது ஒரு நிரந்தர திட்டமாக இருக்கும்.



ஆனால்! இந்த திட்டத்தை நிறைவேற்ற இந்துமத சனாதன வெறியர்களும், பழமை வாதிகளும் முட்டுக்கட்டை போடுகின்றனர். காரணம் சிவனிடமிருந்து உற்பத்தியாகும் புனித நதி கங்கையை வேறு திசைக்கு திருப்புவது கூடாதாம். கங்கை-காவிரி இணைப்பு என்பது ஒரு புறம் இருக்க வைகை, பாலாறு, காவிரி, ஆறு போன்ற ஆறுகளில் மழைக்காலங்களில் வெள்ளமென புரண்டு வீணாக கடலில் கலக்கிறது. குறிப்பாக பாலாற்றுக்கு என்று அணையே கிடையாது மழைக்காலம்தவிர மற்ற நேரங்களில் துளியும் நீர் நிற்பதில்லை இதற்காக பாலாற்றின் பல்வேறு இடங்களில் சிறிய நீர் தேக்கங்களை (டேம்) அமைக்கலாம். பாலாற்றின் குறுக்கே கட்டப்படும் பாலங்களிடையே தடுப்பணைகளை கட்ட முடியும். நிலத்தடி நீரை பாதுகாக்க ஆறுகளில் அளவுக்கு அதிகமாக மணல் எடுப்பதை தடுத்து நிறுத்துவது உடனடி கடமை. பாலாற்றில்13 அடி ஆழம் அளவுக்கு மணலை எடுத்ததால் கடல்நீர் பல்வேறு பகுதிகளில் நிலத்தடிநீரில் புகுந்துள்ளளது அதேபோல் கடல் ஓரங்களில் இறால் பண்ணை அமைப்பதாலும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலத்தில் உப்பு நீர் பாய்ந்து விவசாயம் பொய்த்து வருகிறது.

மிகப்பெரிய நாடுகளின் குப்பைக் கூடைகளாக வளர்முக நாடுகள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம். வெளிநாடு தொழில் முனைவோருக்கு அதிக சலுகைகள் தருவதால் இங்கே தோல் இரசாயன தொழிற்சாலைகள் புற்றீசல்போல் வளர்ந்து வருகின்றன. அதாவது, உமி நமக்கு, சத்துள்ள தானியம் அவர்களுக்கு. கச்சா தோலை பயன் படுத்தி நமது பூமியை சேதப் படுத்தும். அதிலி ருந்து உற்பத் தியாகும் தோல் ஆடைகள், காலணிகள் அவர்களுக்கு ரசாயன ஆலைகள் நமது காற்று நீர் நிலத்தை மாசுப் படுத்துகிறது நோயை அள்ளி தருகிறது. உற் பத்தி செய்யும் ரசாயனங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டு மீண்டும் விலையுயர்ந்த மருந்துகளாக மாறி நமக்கு பல மடங்கு விலைகளில் கிடைக்கும்.

ஆக, பணக்கார நாடுகள் நமது பாரதத்தை குப்பையாக்கி நமது நீரையும், நிலத்தையும், நமது உயிரையும் பறிக்கின்றன. குடிநீரை மாசுப்படுத்தும் ரசாயன ஆலைகள், தோல் பதனிடும் ஆலைகள், மீன்வளத்தை பாதிக்கும் மினசாரஆலைக்கழிவுகள், அணுமின் உற்பத்தி நிலைய கழிவுகளும், இறால் பண்ணைகளும் உடனே தடுக்கப்படவேண்டும்.

இயற்கை நமக்கு கொடுத்த நீரை பாதுக்காக்க நிலத்தையும், ஆற்றையும், கடல், கடல்வளத்தையம் பாதுகாப்போம். நீரால் உலகம் எங்கும் ஏற்படும் பதட்டம் மீண்டும் ஒரு உலகப்போரை, அணுப்போரை கொண்டுவரும் நிலையை நம்மாலும் தடுக்க முடியும் உலகை காக்க மனிதனைக்காத்திட நீரையும் நிலத்தையும் பாதுகாத்திட போராட்ட குரல் கொடுப்போம் கை சேர்ப்போம்.

–மோ. ஜேம்ஸ்


படிப்பகம்

www.padippakam.com

கிரிக்கெட் விளையாட்டில் உலகமே லஞ்ச லாவண்யத்தில் விழிபிதுங்கி பரிதவித்து வரும் நிலையில், தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி கிரிக்கெட் பெயரை சொல்லி பகல் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு சில முக்கிய பா.ம.க எம்.பி.-கள் ஆதரவு கொடுத்து ஆசி வழங்கி வருகின்றனர்.

தாழ்த்தப்பட்ட அணி கோப்பையை தட்டி செல்வத என்ற எண்ணத்தில் இறுதி போட்டியை இதுவரை நடத்தாமல் காலந்தள்ளி வந்தனர்.

பலமுறை இந்த விளையாட்டுக் குழுவை சேர்ந்த அணி தலைவர்கள் கோபாலும், பட்டிபுல மகேசும் இறுதி போட்டி நடத்தும்படி கேட்டுள்ளன

# கிரிக்கெட்டில் பந்தாடப்படும் தலித்துக்கள்


சந்திரசேகரன்

இதோ விளையாட்டு என்ற பெயரில் நூதன மோசடி. காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் ஒன்றிய பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவர் நா. சந்திரசேகரன் சமூக சேவகர் என்று கூறிக்கொள்ளும் இவர் திருப்போரூர் ஒன்றிய பா.ம.க இளைஞர் அணி செயலாளர் என்ற போர்வையில் தனது சாதிய கட்சியின் சின்னமான மாங்கனியை நினைவு படுத்தும் வகையில் மாங்கனி கோப்பை கிரிக்கெட் என்று சித்து வேலைகளை தொடங்கினார்.

இந்த மாங்கனி கோப்பையின் முதல் பரிசு ரூபாய் 10 ஆயிரம். இரண்டாவது பரிசு 7 ஆயிரம் எனவும் பரிசுகளை செங்கல்பட்டு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே. மூர்த்தி வழங்குவதாக கிராமங்கள் தோறும் அழைப்பு விடுத்தார்.

இதையடுத்து சுமார் 32 விளையாட்டுக்குழுக்கள் நுழைவு கட்டணமாக ரூபாய் 200 கட்டிவிட்டு விளையாடவந்தன. இதன் முதல் போட்டி 13-02-2000 அன்று தொடங்கியது. இதற்கிடையில் சந்திரசேகரன் மாங்கனி கோப்பை கிரிக்கெட் விளையாட்டை பயன் படுத்தி பல தனியார் தொழிற்சாலைகளில் பா.ம.க. எம்.பி. ஏ.கே. மூர்த்தி ஒப்புதலோடு பல ஆயிரங்களை வசூல் மூட்டை கட்டினார். இறுதிப்போட்டிக்கு கண்ணகபட்டு அணியும், பட்டிபுலம் விளையாட்டுக்குழுவும் தகுதி பெற்றன. இவ்விரு அணிகளுமே தாழ்த்தப் பட்டவர்களின் அணிகள் என்பதை அறிந்து போட்டி நடத்தியவருக்கு ஷாக். ஆனால் பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்தவர்கள் நடத்திய போட்டியில்

அதற்கு சந்திரசேகரன் "எம்.பி. ஏ.கே. மூர்த்தி போ நடத்த ஒப்புதல் கொடுக்கவில்லை எனவும் வேணும் இரண்டு டீமும் ஆளுக்கு இரண்டாயிரம் வாங்கிகொள பேசாம போங்க" என இறுதி போட்டி நடத்தாம தள்ளினார்.

தாழ்த்தப்பட்டவர்கள் விளையாட்டில் முன்னே வருவதை பொறுத்துக் கொள்ளமுடியாத இந்த சமூ சேவகருக்கு பா.ம.க.-வில் பதவிகள் ஏராளம் காத் கிடக்கின்றன. ஒன்றிய செயலாளராக தற்போது இ போட்டியிட போவதாகவும் தகவல்.

கோயில்களிலும், டீ-க்கடைகளிலும், பொ குளங்களிலும், பள்ளிகளிலும் கடைபிடிக்கபட்டு வருகி தீண்டாமையும், சாதியத்தையும் தற்போது விளையாட் புகுத்தி உள்ளனர். திருப்போரூர் பா.ம.க. வினர்.

–பதவி

அன்பு களம் வாசர்களே !
சந்தாதாரர்களாக சேர்ந்து இதழின் வளர்ச்சிக்கு உதவுங்கள். பழைய சந்தாதாரர்கள் தங்களது சந்தாவை புதுப்பித்துக்கொள்ளவும்.
–நிர்வாகி
ஆண்டு சந்தா ரூ. 50

www.padippakam.com

# MGMயை கண்டித்து ஆர்பாட்டங்கள்



தலித் தலைவர்கள் மீது பொய்வழக்குப் போட்டு சிறையில் அடைத்ததை கண்டித்து அகில உலக Dr. அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க மாணவ மாணவிகள் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம்



தொழிற்சங்கம் ஆரம்பிப்பதை தடுக்க தயாராகும் போலீஸ்



தொழிலாளர்களை நசுக்கும் MGM நிர்வாகத்தைக் கண்டித்து பெண்கள் சாலை மறியல்

...க்கு :

எம்.ஜெ. நாயகம்
களம் நிர்வாகி
57-1, திருக்கழுக்குன்றம் ரோடு,
வல்லம் அஞ்சல்
செங்கல்பட்டு-603 002.

பெறுநர்

நூல் அஞ்சல்

படிப்பகம்